உ

சிவமயம்



யாமாச்சந்தி - சுதுமலை வடக்கைச் சேர்ந்த

# திருமதி குணலக்சுமி செல்லத்துரை

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

20 - 05 - 1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



யாமாச்சந்தி - சுதுமலை வடக்கைச் சேர்ந்த

# திருமதி குணலக்சுமி செல்லத்துரை

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

20 – 05 – 1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# திருமதி குணலக்சுமி செல்லத்துரை

அவர்களின்

## வாழ்வுச்சீர்

வெண்பா

சீராரும் யுவவருடம் சித்திரைசேர் சப்தமியில்
பேராருங் குணலக்சுமி யாம்வனிதை — வாராத
நெறிநாட்டி வள்ளல் திருவருட் பதத்தைக்
குறியாகக் கொண்டா ளுவந்து.

ஆசிரியப்பா

திருவளர் உலகத் துருவளர் கமல
மாமக ளோடும் நாமகள் வதிதரு
வண்டிமிர் சோலை வளர்சுது மலையில்
கொண்ட புகழார் கொழுநிதிச் செல்வன்
சதாசிவ நாம சற்குண சீலன்
மங்கையர் திலகம் மாண்புறுங் குணத்தாள்
தங்கம் மாவெனும் தாழ்குழல் தன்னொடும்
பொருந்திய நல்லறம் சிறந்திட வாழ்ந்துழி
அருந்தவப் பயனே இதுவென வந்தார்
குணபூபதி யென்னும் கொடியிடை தன்னொடு
குணரட்ண நாம குணமாய சீலன்
கடுதாசிக் கூட்டுத் தாபன முதல்வரும்
அடுத்தவர் விரும்பும் அன்பார் செல்வி
குணலக் சுமியெனும் கொடியிடை தானும்
மணவனிப் பயனென மக்க ளாயினர்
குணமார் செல்வி குணலக் சுமியிவளே
மணவனிப் பருவம் மாண்புட னெய்தக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலமுறை வந்த பெரியோர் கூடி
நலமுங் குலனும் நன்றே யமைந்தான்
மரக்கூட்டுத் தாபன அலுவலன் செல்லத்
துரையெனும் யாழ்நகர் வாழுநற் குணசீலன்
வரைகுவை நின்மகட் கென்றே சொல்லிட
அம்மன் அருளினை அகத்தே கொள்ளச்
செம்மைசால் திருமணம் சிறப்பாய் நடந்தது
நம்பியும் நங்கையும் நல்லறம் சிறந்திட
செய்பொருள் பலவும் செம்மையே சேர்த்து
செல்விருந் தோம்பி வருவிருந் தேற்று
நல்விருந் தாற்றி இறைபணி நின்றனர்
மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறாக அமரர்
சற்குண ராசா தர்மகுல ராசா
நற்குண ராசாவாம் நம்பியர் தம்முடன்
தர்மலோ ஜினியாம் தாழ்குழல் நங்கையும்
தர்மறஞ் சிதமாம் ஆயிழை தானும்
மக்களாக வந்தவ தரிக்க வாழ்ந்து
மிக்க செல்வம் மீதுறுற வேண்டித்
திரைகட லோடித் திரவியம் தேடிட
விரைந்தே சென்றார் கனடா மாநிலம்
குணலக் சுமியார் செய்தநற் றவத்தால்
குணமிகும் மருகர் வந்தே யணைந்தனர்
வசந்த குமாரி யொடும் சரஸ்வதி
வசந்த வாழ்வை வைத்தே நின்றார்
புத்திர பாக்கியம் பொருந்திடப் பெற்ற
பத்தினிப் பாவை அவித்த னொடும்
ஐங்கரன் தன்னுடன் செல்வி தன்னையும்
ஐங்கர னருளால் பௌத்திர ராகப்
பெற்றே மகிழ்ந்து பொற்புறும் போதினில்
அம்மன் திருவருள் அணைந்திட ஆனந்த
செம்மான் வயிரவர் பேரருள் கூட்ட
மருதடி யமைந்த மாணிக்க மணியின்
திருந்திய சேவடி சிந்தையிற் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி குணலக்சுமி செல்லத்துரை

தோற்றம் :
09 – 09 – 1930

மறைவு :
20 – 04 – 1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களொடுந் துவன்றி மனையறங் காத்து
மிக்க செல்வம் மீதுறுங் காலை
இல்லறப் பயனாய் நல்லறம் ஆற்றி
நல்லன பலவும் நன்றே செய்துழி
வையத்து வாழ்வாங்கு வாழ்ந்த பேறால்
தெய்வத் திருவருள் கூடப் பெற்றே
வாரா நெறிநாடி வனிதை சென்றனள்
ஆராத இன்பம் பெற்றிடத் தானெனன்.

'' ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர் ''

— ஔவையார்

---

## வருந்த வேண்டா!

இவன் பிறப்பதுமில்லை. இவன் ஒருமுறை இருந்து பின்னர் இல்லாது போவதுமில்லை. இவன் பிறப்பற்றான்; அனவரதன்; இவன் சாசுவதன்; பழையோன்; உடம்பு கொல்லப்படுகையில் இவன் கொல்லப்படான்.

நைந்த துணிகளைக் கழற்றி எறிந்துவிட்டு மனிதன் புதிய துணிகள் கொள்ளுமாறு போல ஆன்மா நைந்த உடல்களைக் களைந்து புதியனவற்றை எய்துகிறது.

இதனை ஆயுதங்கள் வெட்டமாட்டா; தீ எரிக்காது; நீர் இதனை நனைக்காது; காற்று உலர்த்தாது.

எல்லோருடம்பிலும் உள்ள இந்த ஆன்மா கொல்லப்பட முடியாதது. ஆதலால் நீ எந்த உயிரின் பொருட்டும் வருந்துதல் வேண்டா!!

— பகவத்கீதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

அருளிச்செய்த

# கோளறு திருப்பதிகம்

[மனக்கவலை மாற்றுதற்கு ஒரேயொரு மருந்து; உள்ளத்தைத் தூய்மை செய்து, அதில் இறைவன் திருவடிகளைப் பிரதிட்டை செய்து, எக்கருமத்தைச் செய்யும் போதும் மறவாது பூசித்து 'நல்வழி காட்டுக' என்று பிரார்த்திப்பதேயாகும்; இதுவே செய்தவம். சிந்தனை தெளிவுறும் முறையில் கோளறு பதிக பாராயணம் நடைபெறுமாயின் உலகம் கடைத்தேறும்; உய்யும்.]

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

என்பொடு கொம்பொடாமை இவைமார் பிலங்க
எருதேறி ஏழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றொடேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெறி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிநுதல் மங்கையோடு வடபால் இருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலன்அங்கி நமனோடு தூதர்
கொடுநோய்கள் ஆன பலவும்
அதிகுணம் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

நஞ்சணி கண்டன்எந்தை மடவாள் தனோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உருமிடியு மின்னும்
மிகையான பூதம் அவையும்
அஞ்சிடும் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

வாள்வரி அதளதாடை வரிகோ வணத்தர்
மடவாள் தனோடும் உடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

செப்பிள முலைநன் மங்கையொரு பாகமாக
விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும்அப்பும் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும்வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேள்பட விதிசெய்தன்று விடைமேல் இருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழ்இலங்கை அரையன் தனோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனும்மாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.


கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமும் மதியும்நாகம் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரொ டமனைவாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செய்மை திடமே
அத்தரு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெல் துன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும்நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே.

திருச்சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எமது குடும்பத் தலைவியாய் விளங்கிய

**அமரர் திருமதி குணலக்சுமி செல்லத்துரை**

அவர்களின் மறைவின்போது பல்வேறு வழிகளில் எம்முடன் நின்று உதவிகள் புரிந்த உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், இன்று எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆன்மசாந்திக் கிரியையிலும், மதியபோசனத்திலும் பங்குபற்றிய அனைவருக்கும் எமது இதயங்கனிந்த நன்றிகள்.

இங்ஙனம்

— குடும்பத்தினர் —

யாமாச் சந்தி,

சுதுமலை வடக்கு.

20-5-95

---

அம்மா, இணுவில் - மருதனார்மடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org